# சப்ரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களம்
# விடுமுறைக்கால சுயகற்றல் செயலட்டை

**ஆக்கம் - நிவிதிகல கல்வி வலயம்**

**தமிழ் – தரம் 9**

**காலம் : 2021.05.24 தொடக்கம் 2021.05.30 வரை**

**திங்கட்கிழமை** (2021.05.24 - தங்கள் அப்பியாசக் கொப்பியில் எழுதி செய்யவும்.)

***பாடநூலில் "செய்யும் தொழிலே தெய்வம்" பாடத்தை ஆதாரமாகக் கொண்டு விடை எழுதுக***

1. இப்பாடலுக்கு பொருத்தமான உவமை ஒன்றை தருக ?
2. ஏழைகள் படும்பாடு இப்பாடலில் எவ்வாறு சித்தரிக்கப்பட்டுள்ளது ?
3. காயும் ஒரு நாள் கனியாகும் என்பதை விளக்குக ?
4. இப்பாடல் தரும் படிப்பினை யாது ?

**செவ்வாய்க்கிழமை** (2021.05.25 - தங்கள் அப்பியாசக் கொப்பியில் எழுதி செய்யவும்.)

**வாக்கியங்களை ஒழுங்குபடுத்தி எழுதுக**

1. உணவாகும்/ வளர்த்தால்/ காக்கும்/ பயிரை/ உயிரைக்
2. தொழிலே/ நமது /செய்யும் /செல்வம்
3. தெரியும் /சாமிக்கு /ஏழைகளின்/ பூமிக்கு /நிலைமை
4. நனவாகும் /காயும்/ ஒருநாள் /கனவும்/ ஒருநாள்/ கனியாகும்
5. மாறாது/ மீறினாலும் /பசி /வழி/ உடல் /வாடி.

**புதன்கிழமை** (2021.05.26 - தங்கள் அப்பியாசக் கொப்பியில் எழுதி செய்யவும்.)

**அடைமொழிகள்**

பாடநூல் துணைகொண்டு பெயரடை, வினையடை என்பவற்றிற்கு வரைவிலக்கணம் தந்து ஒவ்வொன்றுக்கும் மும்மூன்று உதாரணங்கள் தருக மேலும் **பக்கம் 77** இல் காணப்படும் பயிற்சியை செய்க

**வியாழக்கிழமை** (2021.05.27 - தங்கள் அப்பியாசக் கொப்பியில் எழுதி செய்யவும்.)

**பெயரடை களையும் வினையடை களையும் வேறுபடுத்துக**

1) பழுத்த பழம் 2) இனிய பாடல் 3) சித்திரப் பதுமை 4) உரத்துப் பேசினார்
5) மெல்லச் சிரித்தாள் 6) அழகிய பாடல் 7) விரைந்து வந்தான் 8) வியப்போடு பார்த்தார்
9) குளிர்ந்த காற்று 10) இனிய கனவு 11) இரசித்துப் பார்த்தார் 12) கடிந்து பேசினார்.

**வெள்ளிக்கிழமை** (2021.05.28 - தங்கள் அப்பியாசக் கொப்பியில் எழுதி செய்யவும்.)

**பின்வரும் வாக்கியங்களில் உள்ள பெயரடை களையும் வினையடை களையும் குறிப்பிடுக**

1) நீல வானில் பறவைகள் சிறகடித்து பறந்தன 2) உயர்ந்த மரம் முறிந்து விழுந்தது
3) குயில் இனிமையாகப் பாடியது 4) மணிமேகலையின் செயலை அனைவரும் வியப்போடு பார்த்தனர்
5) சின்னஞ்சிறு கண்ணம்மா துள்ளி விளையாடினாள்.

**சனிக்கிழமை** (2021.05.29 - தங்கள் அப்பியாசக் கொப்பியில் எழுதி செய்யவும்.)

**பக்கம் 78 காணப்படும் சொற்பொழிவு என்கின்ற பகுதியை நன்கு வாசித்து பின்வரும் வினாக்களுக்கு சரி பிழை இடுக**

1) சொற்பொழிவுகளைக் கேட்பதால் பேச்சாற்றல் வளரும் ( )
2) இலக்கிய சொற்பொழிவு ஒன்றை கேட்பதால் கிரகித்து சிந்திக்கும் திறன் வளரும் ( )
3) நல்ல சொற்பொழிவுகள் புரியாத புதிராகவே இருக்கும் ( )
4) சொற்பொழிவுகளில் மேற்கோள்கள் பாடல்கள் இடம் பெற அவசியமன்று ( )
5) நல்ல சொற்பொழிவுகள் தலைப்புக்கு அமைவாக இருக்கும் ( )

**ஞாயிற்றுக்கிழமை** (2021.05.30 - தங்கள் அப்பியாசக் கொப்பியில் எழுதி செய்யவும்.)

**பக்கம் 76** இல் காணப்படும் கிரகித்தல் பயிற்சிகளை செய்க.

மேலும் செய்யும் தொழிலே தெய்வம் என்னும் தலைப்பில் 200 சொற்களுக்கு மேற்படாதவாறு கட்டுரை ஒன்றை எழுதுக